# விலைமதிப்புத் திணைக்களம்

நிதி அமைச்சு

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2018

# விலைமதிப்புத் திணைக்களம்

**இல: 748, மருதானை வீதி,**
**கொழும்பு 10.**
**0112694381**
**0112694382**
**தொலை நகல்: 0112694383**
**மின்னஞ்சல்: cv@valuationdept.gov.lk**

**கௌரவ மங்கள சமரவீர**
**நிதி அமைச்சர்**

**கௌரவ எரான் விக்கிரமரத்ன**
**நிதி இராஜாங்க அமைச்சர்**

**கலாநிதி. ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரி செயலாளர்**

**திருமதி. பி.டி.டி.எஸ்.முதுகுமாரண**
**அரசாங்க பிரதம விலைமதிப்பீட்டாளர்**

# உள்ளடக்கம்

## பகுதி 1 - எம்மைப் பற்றி

முகவுரை 03

திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கங்கள் மற்றும் முக்கிய செயற்பாடுகள் 05

சவால்களும் முகாமைத்துவ உபாயங்களும் 06

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள 07

## பகுதி II - செயலாற்றுகை மற்றும் முன்னேற்றம்

மூலதன மதிப்பீடு 08

வாடகை விலை மதிப்பீடுகள் 09

நிறைவுசெய்யப்பட்ட - எதிர்வுகூறப்பட்ட பொதுவான 10

இலக்கிடப்பட்ட விலைமதிப்புக்கள 11

வரிப்பணம் மற்றும் வரிப்பணத்துடன் சார்ந்த விலைமதிப்புக்கள 12

வரிப்பணம் மதிப்பீடு சார்ந்த கணக்கு 14

ஆதனப் பிரிவின் நடவடிக்கைகள் பற்றிய சிறு விபரம 18

ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசேட கருத்திட்டங்களின் சாராம்சம் 19

கல்வி முன்னேற்றம் 21

## பகுதி III - நிதிசார் செயலாற்றுகையும் பகுப்பாய்வும்

*நிதிசார் செயலாற்றுகையை அளவிடலும் அறிக்கையிடலும்* 22

## பகுதி IV - பதவியணியும் மனித வளமும்

2018.12.31 திகதிக்கு பதவியணி *24*

# பகுதி 1 - எம்மைப் பற்றி

## 01. முகவுரை

1915 ஆம் ஆண்டு இந்த நாடு பூராகவும் வியாபித்து காணப்பட்ட பிரித்தானிய ஆட்சிக் காலப் பிரிவில் நாட்டின் காணி உரிமம், காணி உபயோகம் மற்றும் காணி உரித்துடமை போன்ற துறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. 1863 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கட்டளைச் சட்டம் ''பொது உபயோகத்தின் பொருட்டு தனியார் காணிகளின் உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் காணிகளை அளவை செய்து விலைமதிப்புச் செய்வதற்கும் ஏற்ற வகையிலான கட்டளைச் சட்டமொன்றாகும்'' எனும் சட்ட ரீதியான உரிமைப் பெற்றுக்கொள்ளப்பட்டது. அரசாங்க ஆதனங்களை வருடாந்தம் விலைமதிப்புச் செய்வதற்கும் நகரப் பிரதேசங்களில் காணப்பட்ட அசையா சொத்துக்களை விலைமதிப்புச் செய்வதற்கும் காணிகளுக்குரிய ஏனைய விடயங்களை விலைமதிப்புச் செய்வதற்கும் 1921 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி உள்ளூராட்சி சபையொன்று நிறுவப்பட்டது. அரசாங்க விலைமதிப்பீட்டாளர் பதவி மற்றும் அவரது ஆளணிக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளூராட்சி சபையின் கீழ் ஓதக்கீடு செய்யப்பட்டது. அரசுக்குச் சாந்தமான ஆதனங்களை விலைமதிப்புச் செய்வதற்கும் மரண சாசனச் சொத்து வரிகளை விலைமதிப்புச் செய்வதற்கும் பிரதேச அதிகார சபைகளுக்குரிய காணிகளை சுவீகரிப்பதற்கும் அவற்றின் பெறுமதியை விலைமதிப்புச் செய்வதற்கும் விலைமதிப்பீட்டாளர் பதவி 1923 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

1939 ஆம் ஆண்டு திறைசேரியின் விலைமதிப்பு பிரிவு மற்றும் உள்ளூராட்சி விலைமதிப்பீட்டாளர்களின் திணைக்களம் ஆகிய இரண்டு நிறுவனங்கள் அரசாங்கத்தின் சார்பில் விலைமதிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன. செலவுகளை வெட்டிவிடும் செயன்முறையின் கீழ் மேற்படி இரண்டு பிரிவுகளையும் ஒன்றிணைத்து புதிதாக திணைக்களமொன்றின் கீழ் உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் அதனை இயக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் பெறுபேறாக 1939 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பிரதம விலைமதிப்பீட்டாளராக கெப்டன் ஈ.பி.ஈஸ்ட்மன் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

இக்காலப் பிரிவுக்கு இடையில் விலைமதிப்புத் துறையின் தொழில் தரத்தை தரம் உயர்த்தும் நோக்கில் விலைமதிப்பு தொடர்பிலான டிப்ளோமா பாடநெறியொன்று இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. விலைமதிப்பீட்டாளர்களுக்கான தொழில்துறை கல்வி பாடநெறியான ஆதன முகாமைத்துவம் பற்றிய பட்டப்படிப்பு 1972 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னர் அடுத்த வருடத்திலிருந்து அந்தப் பாடநெறி வித்தியோதய பல்கலைக்கழகத்தில் (தற்போது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்) ஆரம்பிக்கப்பட்டது. தற்போது விலைமதிப்புத் திணைக்களத்திற்கு தொழில்வான்மையாளர்களை உருவாக்கித்தரும் பிரதான மூலமாக இப்பல்கலைக்கழகம் காணப்படுகின்றது. திணைக்களத்திற்கான ஆட்சேர்ப்பு பட்டப்படிப்பு வரை தரம் உயர்த்தப்பட்டது. திணைக்களத்திற்கு ஆதண முகாமைத்துவம் மற்றும் விலைமதிப்பு பற்றிய விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் பெற்றவர்கள் மாத்திரம் ஆட்சேர்க்கப்படுகின்றனர்.

விலைமதிப்புத் திணைக்களம் இந்த நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி செயன்முறைக்கு விசேட பங்களிப்பைச் செலுத்தி வருகின்றது என்பது பொதுமக்களின் கருத்தாக உள்ளது. 95 வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ள எமது முன்னோர்கள் அவர்களது புத்திசாதுாரியம் மற்றும் அறிவுத்திறன் மூலம் விலைமதிப்பு மற்றும் ஆதன முகாமைத்துவம் பற்றிய சம்பிரதாயங்கள் மற்றும் உயர் தரங்களைப் பேணி வந்துள்ளனர். எனவே அரசாங்கத் துறையில் புகழ்மிக்க தொழிற்துறை நிறுவனமாக அது தொடர்ந்துள்ளது. அவர்கள் தமது அர்ப்பணிப்பு மற்றும் கௌரவத்தின் மூலம் கட்டியெழுப்பிய சிறந்த தொழில்முறைகள் மூலம் நாம் அறிந்துகொள்வது யாதெனில் சேவை வழங்குவதில் தொழிற்துறை ரீதியில் உயர் தரத்திலான

விலைமதிப்பீட்டாளர்கள் என்ற வகையில் எத்தகைய சிறந்த சேவையை நாம் வழங்க வேண்டும் என்பது பற்றியதாகும்.

இந்த செயலாற்றுகை மற்றும் கணக்கு அறிக்கைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் நோக்கங்கள் உண்மையான பெறுபேறுகளுடன் ஒப்புநோக்கப்பட்டு அதன் இலக்குகள் மற்றும் செயற்பாடுகளுடன் செயலாற்றுகையின் மற்றும் முன்னேற்றத்தின் விசேட சந்தர்ப்பங்களை எடுத்துக்கூறும் சந்தர்ப்பமாகும். அந்த நடவடிக்கைகள் இந்த நாட்டின் சமூக பொருளாதார நிதி முகாமைத்துவ செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளாகும். ஏற்புடைய திட்டங்கள், மூலோபாயங்களை தொடர்ந்தேர்ச்சியாக மேற்கொள்ள ஆரம்பித்து இலங்கை நிதி அமைச்சின் கீழ் தனது வரவுசெலவுத்திட்ட முன்மொழிவில் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் அதற்கு நியாயமான முறையில் நடந்துகொள்வதற்கும் விலைமதிப்புத் திணைக்களம் முனைந்துள்ளது. இந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு விலைமதிப்புத் திணைக்களத்தின் செயற்பாடுகள் இதன் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

# 02. திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கங்கள் மற்றும் முக்கிய செயற்பாடுகள்

### "எமது நோக்கு"

"சமூகப் பொருளாதர அபிவிருத்தியினை மேம்படுத்தும் பொருட்டு ஆதன விலை மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்தின் சர்வதேச உயர்தர நியமங்களினூடாக தொழில்சார் நிபுணத்துவத்தைப் பேணுதல்"

### "எமது செயற்பணி"

"இலங்கை அரசாங்கத்திற்குப் பரந்த தொழில் தேர்ச்சி மிக்க விலை மதிப்பீடு மற்றும் ஆதன முகாமைத்துவ சேவையை வழங்குவதும் வினைத்திறனும் உற்பத்தித் திறனும் மிக்க முகாமைத்துவக் கட்டமைப்பின் மூலம் போட்டித் தன்மையுடன் கூடிய செலவுசார் உணர்வுமிக்க திணைக்களமாக செயற்படுதல்"

### "எமது குறிக்கோள்கள்"

"பயன் அடிப்படையிலான செயலாற்றுகை இலக்குகளினை நோக்கிச் சிறந்த செயன்முறை நியமங்களைப் பின்பற்றி சேவை பெறுனருக்கு உயர் தொழில் சார் சேவைகளை வழங்குவது இத்திணைக்களத்தின் குறிக்கோளாகும்"

### "எமது முக்கிய பொறுப்புக்கள்"

"சட்ட ரீதியான பொறுப்புக்களுக்கு மேலதிகமாக விலை மதிப்புத் திணைக்களம், அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களுக்குப் பரந்தளவிலான விலை மதிப்பு மற்றும் ஆதன முகாமைத்துவ சேவைகளை வழங்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது"

## 3. சவால்களும் முகாமைத்துவ உபாயங்களும்

சவால்களும் நுட்ப முறைகளும் பகுதியானது உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான மதிப்பீடு, செயற்றிறன் மதிப்பீடு, நிதி அறிக்கையிடல் என்பவற்றின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் என்பவற்றுடன் தொடர்பு படுகின்றது. மேலும் சரியானதும் வினைத்திறன் மிக்கதுமான திட்டத்தை விருத்தி செய்து அதனை அமுல்படுத்தி கண்காணிப்பதனூடாக அதனுடைய பலவீனங்கள், சரியான கணக்கீட்டுத் தன்மையை உறுதி செய்வதோடு அதன் விளைவுகளை அறிக்கையாக வெளிப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தரவுகளின் படி திணைக்களத்தின் செயற்றிறனை ஆய்வு செய்வதன் மூலமும் அத்தரவுகளை வெளிப்படுத்துவதன் மூலமும் மதிப்பீட்டு நடவடிக்கையின் பற்றாக்குறையான தன்மையை அடையாளம் கண்டு கொள்ளவும் அப்பிரச்சினையை தீர்ப்பதற்கான தேவையையும் அடையாளம் கண்டு கொள்ளவும் முடிகின்றது. இதனூடாக உயர் முகாமைத்துவத்தினால் ஆண்டின் வினைத்திறனையும் விளைதிறனையும் மதிப்பிட முடிகின்றது.

நாங்கள் வழங்கும் சேவையானது முகாமைத்துவத்தினுடைய வினைத்திறன் மற்றும் விளைதிறனில் பெருமளவு தங்கியுள்ளது. இது எம்முடைய அடிப்படைக் கருத்துக்கள் மீது மறுகவனம் செலுத்தி எம்மை வழி நடத்துவதனூடாக மிகச் சிறந்த மதிப்பீட்டுத் தந்திரோபாயத்தை விருத்தி செய்து எமது நிறுவனத்தின் இயலுமையை அடையக் கூடியதாக உள்ளது. மேலும் எமது பலம், பலவீனம், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தலை அளவிடுவதற்கு சிறந்த செயற்றிறன் மதிப்பீட்டு முறை இல்லாத சந்தர்ப்பமானது மிக முக்கியமான சவாலாக அமைந்தும் விடுகின்றது.

நிறுவன முகாமை என்ற புதிய கருத்தின் மூலம் எமது செயற்றிறனை விருத்தி செய்து அதனூடாக எமது உள்வாரியான மற்றும் வெளிவாரியான ஆற்றல்கள், சவால்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பவற்றை மதிப்பிட முடிகின்றது. எமது நடவடிக்கையின் பிரதானமான கவனமானது அவர்களின் பலம் எங்கே உள்ளது என்பதிலும் மிகப்பெரிய வாய்ப்புக்கள் எங்கே இல்லாமல் போகின்றது என்பதிலும் காணப்படுகின்றது. ஓர் திறன்பட்ட அரச நிறுவனமாக சொத்து முகாமைதத்துவம் மற்றும் மதிப்பீடு ஆகிய துறைகளில் ஓர் பரந்த சந்தையைப் பெற்று அரசாங்கம் மற்றும் பகுதியளவில் அரச சார்புடைய நிறுவனங்களுக்கு எமது சேவையை வழங்குகின்றோம்.

எமது திணைக்களத்திற்குப் பொருத்தமான பிரதான அதிகாரிகள் கிடைக்கக் கூடியதாக உள்ளமை எமது பெரும் வளமாக காணப்படுகின்றது. எமது திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் எனும் விசேட பட்டப்படிப்பை பெற்றவர்களாக உள்ளனர். அத்தோடு அனைவரும் தேவையான அறிவு ஆற்றலோடு புதிய திறன்களையும் கொண்டவர்களாக உள்ளனர். அத்தோடு உயர் தரத்திலான தொழில் திறனைப் பேணிக்கொள்ளும் பொருட்டு அரச பட்டய நிலஅளவை நிறுவனத்தில் தொடர்ச்சியான தொழில் விருத்தி கட்டளைகளுக்கு அமைய செயற்பட்டு தனது சேவைக் காலத்தினுள் தேவையான அறிவு மற்றும் திறன்களை நாளதுவரைப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அரச நிலஅளவை நிறுவனத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விலை மதிப்புத் திணைக்களத்தினால் துரித வழிமுறைகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. மேலும் எமது திணைக்களமானது மாவட்ட விலை மதிப்பீட்டாளர் மற்றும் உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர் ஆகியோருக்கு அதே பல்கலைக்கழகத்தில் முதுமாணி சொத்து முகாமைதத்துவமும் மதிப்பீடும் பட்டப்படிப்பைத் தொடர்வதற்காக நிதியுதவி வழங்குகின்றது. மேலும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் திணைக்கள ஊழியர்களின் விலை மதிப்பீடு தொடர்பான அறிவை மேம்படுத்தும் முகமாக சாத்தியமான விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

## 4. திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்:

இத்திணைக்களம் பின்வரும் பிரதான செயற்பாடுகளின் கீழ் வகைப்படுத்தக் கூடிய திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளான விலைமதிப்பு மற்றும் ஆதன முகாமைத்துவம் ஆகிய விடயங்களில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்ட அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கி வருகின்றது. திணைக்களத்தின் பிரதான பணிகள் கீழ்வரும் பிரதான பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன.

(அ) காணி சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில், நிதியை ஒதுக்கீடு செய்வதற்காக நஷ்டஈட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

(ஆ) காணி சுவீகரித்தல் சட்டத்தின் 38 (அ) பிரிவின் கீழ் பொது நோக்கங்கள் தொடர்பில் கட்டாயமாக சுவீகரிக்கப்படுகின்ற தனியார் காணிகள் பற்றிய நிலைமை அறிக்கைகளைத் தயாரித்து, அதனைத் தொடர்ந்து குறித்த அரசாங்க மற்றும் அரச சார்பு நிறுவனங்களின் விசேட கருத்திட்டங்களுக்கு பாரிய அளவில் விலைமதிப்பு செய்யப்பட்டு ஆதன முகாமைத்துவ சேவை வழங்கப்பட்டது.

(இ) காணி சுவீகரிப்பு சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய காணிகள் தொடர்பில் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளுக்கான விலை மதிப்புகளைத் தயாரித்தல்.

(ஈ) தனியார் ஒப்பந்தத்தின் கீழான கொள்வனவு, கணக்கீடு மற்றும் குத்தகை நோக்கங்களுக்கான மதிப்பீடுகள் அடங்கலாக பல்வேறுபட்ட நோக்கங்கள் தொடர்பில் நிலையான மற்றும் நிலையற்ற ஆதனங்களை மதிப்பிடுதல்.

(உ) இலஞ்சம் ஊழல் சட்டம் மற்றும் காணி மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் அத்தகைய மதிப்பீடுகளை மேற்கொள்ள தத்துவமளிக்கப்படுகின்ற போதும் விலை மதிப்புகள் மேற்கொள்ளப்படும்.

(ஊ) அரச மற்றும் பிற நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக இனங்காணப்பட்ட அவற்றின் ஆதன உடமைகள் தொடர்பில் அல்லது அவற்றின் பாவனை மற்றும் அமைவிட நோக்கத்ததிற்காக அத்தகைய நிறுவனங்களுக்கு தனியார் ஆதனங்களைத் தேவைப்படுத்துகின்ற போது வாடகை பற்றிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

(எ) வரிகளை விதிப்பதற்காக உள்நாட்டு வரிவிதிப்பு தொடர்பில் கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் உள்ளடங்கியுள்ள சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து உள்ளூர் அதிகார சபைகளினது அதிகாரத்தினுள் வருகின்ற ஆதனங்களின் மதிப்பீடுகளையும் மீள்மதிப்பீடுகளையும் இத்திணைக்களம் நிறைவேற்றி வருவதுடன், பாதிக்கப்பட்டவரின் செலுத்தநர்கள் மூலம் அத்தகைய மதிப்பீடுகள் தொடர்பில் செய்யப்படும் ஆட்சேபனைகளை நிர்ணயிப்பதிலும் உதவுகின்றது.

(ஏ) விசேடமாக இலங்கை செலாவணி பாதுகாப்பு ஆணைக்குழு மற்றும் இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு தர மதிப்பீட்டுச் சபை போன்ற நிறுவனங்களுக்கு சொத்து மதிப்பீடு மற்றும் சொத்து முகாமைத்துவம் ஆகிய விடயங்களில் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

(ஐ) நிபுணத்துவம் வாய்ந்த சான்றுகளை வழங்குவதன் ஊடாக சொத்து நஷ்ட ஈடுகளைத் தீர்மானிக்கின்ற மற்றும் மதிப்பீட்டுப் பிணக்குகளை விசாரணை செய்கின்ற சட்ட நீதிமன்றங்களுக்கும் பல்வேறுபட்ட பிற நியாய சபைகளுக்கும் இத்திணைக்களம் உதவி வருகின்றது. கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள சொத்துக்கள் தொடர்பான விடயங்கள் தவிர மேலும் வாடகை சபை பற்றிய கூட்டங்களில் பிரதான மதிப்பீட்டாளருக்கும் இத்திணைக்களத்தின் ஊழியர்கள் உதவி வருகின்றனர்.

(ஒ) திறைசேரியினால் கோரும் பட்சத்தில் பொது முயற்சிகளினது வியாபார நிலை மதிப்பு நடவடிக்கைகளையும் இத்திணைக்களம் மேற்கொள்கின்றது.

(ஓ) பிரதான மதிப்பீட்டாளரின் அங்கீகாரத்துடன். கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள அரச உடமை ஆதனங்களின் வருடாந்த பெறுமானத்தினை மதிப்பிடுகின்றது.

(ஔ) கணக்கீட்டு நோக்கத்திற்காக அரச மற்றும் பகுதியளவில் அரச உடமை உடைய நிறுவனங்களின் சொத்துக்களை மதிப்பீடு செய்தல்.

(அஅ) அனர்த்த முகாமைத்துவ நிலமைகளின் போது இழப்பீடுகளை மதிப்பீடு செய்தல்.

## பகுதி II - செயலாற்றுகை மற்றும் முன்னேற்றம்

### 5. மூலதன மதிப்பீடு

#### I. 1950 இல 09 காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழான விலை மதிப்பீடுகள்:

(அ) காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் காணி சுவீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டை மதிப்பீடு செய்தல்.


1950 இல 09 காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணிக்களுக்கான நிதியங்களை ஒதுக்குவதற்காக ஆதன அலகுகள் 970 இன் விலைமதிப்புக்கள் 2018 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டன.

(ஆ) காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் நிலமை அறிக்கைகளை தயாரித்தல்.

காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் உடமை அரசுக்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் நிலமை அறிக்கைகள் 5,243 அளவு தயாரிக்கப்பட்டுள்ளது.

(இ) காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் பொது நடவடிக்கைகளுக்காக கட்டாயமாக காணி சுவீகரிக்கப்படும் போது குறித்த தரப்பினருக்கு செலுத்த வேண்டிய நட்டஈட்டை மதிப்பீடு செய்தல்.

சுவீகரிப்பு உத்தியோகத்தர்களினால் சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் 17(1) ஆம் பிரிவுக்கு அமைய வழங்க வேண்டிய நட்டஈட்டுக்காக ஆதனங்கள் 19,454 அலகுகள் 2018 ஆம் ஆண்டில் விலைமதிப்பு செய்யப்பட்டது.



**II. பல்வேறு காரணங்களுக்காக அசையும் அசையா சொத்துக்களை விலைமதிப்புச் செய்தல்**


அ) நீண்டகால மற்றும் குறுகியகால குத்தகைக்கு அரசாங்க காணிகளை விலைமதிப்பிடல்.

ஆ) கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக அரசாங்க மற்றும் நிறுவன ஆதனங்களை விலைமதிப்பிடல்.

இ) தனிப்பட்ட ஒப்பந்தங்களின் கீழ் ஆதனக் கொள்வனவு மற்றும் உரிமை நீக்கம்.

ஈ) திணைக்கள, நட்டஈட்டுத் தொகை மற்றும் விலைமதிப்பு பிணக்குகள் ஆராய்ந்து தீர்ப்பளிக்கும் நீதிமன்றங்கள் மற்றும் நியாய சபைகளுக்கு நிபுணத்துவ உதவி வழங்குதல்.

**அரசாங்க மற்றும் அரச சார்பு கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் 46198 அலகுகள் 2018 ஆம் ஆண்டு திணைக்களத்தினால் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.**




**III. இலஞ்ச சட்டத்தின் கீழான விலை மதிப்பீடு**

2018 ஆம் ஆண்டின் போது இலஞ்ச சட்டத்தின் கீழ் 15 விலை மதிப்பு அறிக்கைகள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டன.

**IV. முத்திரைத் தீர்வைக்கான விலை மதிப்பீடு**

132 சொத்துக்கள் முத்திரை தீர்வை நோக்கங்களுக்காக விலை மதிப்பீடு செய்யப்பட்டன.

## 6. வாடகை விலை மதிப்பீடுகள்

I. அரசாங்க ஆதனங்கள் தொடர்பில் மாதாந்த வாடகையை தீர்மானித்தல்

2018 ஆம் ஆண்டின் போது, பல்வேறுபட்ட அரச நிறுவனங்களின் உபயோகத்துக்காக தேவைப்படுத்தப்பட்ட 9,184 சொத்துக்களின் வாடகை விலை மதிப்பீடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. அந்த நிறுவனங்களின் சுய பாவனைக்கு மற்றும் வசிப்பிடத் தேவைகளுக்காக தனியார் காணிகள் அவசியப்படும் போது அதற்கான விலைமதிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.


**II. தாபன விதிக்கோவையின் கீழ் அரசாங்க வீடுகளுக்கான வாடகை**

தாபன விதிக்கோவையின் ஒழை அத்தியாயத்தின் பிரிவு 5.1 மற்றும் 7.1 இன் நியதிகளுக்கமைய 5,949 சொத்துக்கள் தொடர்பில் சிக்கன வாடகைகள் மற்றும் தண்டனை வாடகைகள் 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டன.

**7 - நிறைவுசெய்யப்பட்ட - எதிர்வுகூறப்பட்ட பொதுவான**

| விலைமதிப்பு வகை | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| நிலவர அறிக்கை | 22877 | 8092 | 23389 | 11036 | 5243 | 5046 |
| காணி சுவீகரிப்பு | 16476 | 15639 | 20045 | 21280 | 19454 | 20086 |
| காணி மதிப்பீடு | 1243 | 648 | 1032 | 1471 | 970 | 521 |
| காணி நானாவித | 48174 | 33222 | 41987 | 56931 | 46198 | 29872 |
| கூலி தனிப்பட்ட | 6067 | 7619 | 8912 | 11149 | 9184 | 7896 |
| கூலி அரசாங்க | 4521 | 4094 | 4132 | 4230 | 5949 | 4262 |


**நிறைவு செய்யப்பட்ட பொதுவான விலைமதிப்பு - வருடத்திற்கான மற்றும் எதிர்வுகூறக்கூடிய**




*முத்திரை தீர்வைகள் மற்றும் இலஞ்ச ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் காட்டப்படவில்லை.


## 8. இலக்கிடப்பட்ட விலைமதிப்புக்கள்

| | 2018 இலக்கிடப்பட்ட | 2018 நிறைவுசெய்யப்பட்ட |
|---|---|---|
| நிலவர அறிக்கை | 6245 | 5243 |
| காணி சுவீகரிப்பு | 18107 | 19454 |
| காணி மதிப்பீடு | 759 | 970 |
| காணி நானாவித | 33295 | 46198 |
| கூலி தனிப்பட்ட | 8250 | 9184 |
| கூலி அரசாங்க | 5949 | 5949 |




**9. வரிப்பணம் மற்றும் வரிப்பணத்துடன் சார்ந்த விலைமதிப்புக்கள்**

மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் கீழ் வரும் அவற்றினது பிரதேச வரிகளை அறவிடுவதற்கு ஆதனங்கள் 194,623 இன் அடிப்படை ஆய்வுகளும், ஆதனங்கள் 215,071 இன் இறுதி பரீட்சிப்புக்களும் விசேட ஆதனங்கள் 1,112 இன் இறுதி பரீட்சிப்புக்களும் 2018 ஆம் ஆண்டில் நிறைவுசெய்வதற்கு திணைக்களத்திற்கு இயலுமாகியது.




**மீள் மதிப்பு வேலைகள் - வருடா வருடம் எதிர்வுகூறப்பட்டது**

| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| பூர்வாங்க ஆய்வு | 184675 | 119539 | 173619 | 183632 | 194623 | 363425 |
| இறுதிப் பரிசோதனை | 180548 | 150455 | 166155 | 194527 | 215071 | 360283 |




**10. வரிப்பணம் மதிப்பீடு சார்ந்த கணக்கு**

2018 ஆம் ஆண்டில் காணி வரிப்பண மீள் விலைமதிப்புகள் 30,919 உம் கட்டிட மீள் வரிப்பண விலை மதிப்புகள் 1,596 உம் நிகழ்வுகள் 4,870 தொடர்பிலான விலைமதிப்பு எதிர்ப்புளும் திணைக்களத்தினால் விலைமதிப்பு செய்யப்பட்டுள்ளது.




| | 2018 இலக்கிடப்பட்ட | 2018 நிறைவு செய்யப்பட்ட | 2019 எதிர்வுகூறப்பட்ட |
|---|---|---|---|
| காணி மீள் வரிப்பண விலைமதிப்பு | 25555 | 30919 | 25475 |
| கட்டட மீள் வரிப்பண விலைமதிப்பு | 1715 | 1596 | 1655 |
| மீள் வரிப்பண விலைமதிப்பு எதிர்ப்புகள் | 4966 | 4870 | 5215 |



**காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையின் செயற்பாடுகள் பற்றிய கணக்கு**

கட்டாயக் காணி சுவீகரித்தல்களுக்காக வழங்கப்பட்ட நட்டஈடுகளில் திருப்தி அடையாத தரப்புகளினால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளை விசாரணை செய்யும் பொருட்டு அரசாங்கம் சார்பில் வழக்கு தொடுப்பதற்கு 1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் சட்டத்ததின் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்ட "காணி சுவீகரித்தல் மீளாய்வு சபைக்கு" இத்திணைக்களத்தின் சட்டப் பிரிவு உதவி வருகின்றது.

| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| வருட ஆரம்பத்தில் மீதி | **978** | **2216** | **178** | **179** | **236** |
| வருடத்தினுள் கிடைக்கப்பெற்றவை | | | | | |
| விசாரணை செய்யப்பட்ட எண்ணிக்கை | **429** | **558** | **215** | **92** | **293** |
| | **1486** | **2333** | 1407 | **393** | **529** |



**காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையினால் நடாத்தப்பட்ட மேன்முறையீடுகளின் சுருக்கம்**

| முறைப்பாடுகளின் வகை | பெறப்பட்டது | விசாரிக்கப்படட்டது |
|---|---|---|
| காணி சுவீகரிப்பு மீளாய்வுச் சபை | 529 | 236 |
| உயர் நீதிமன்றத்தில் கையாளப்பட்ட வழக்குகள் | 11 | 1 |
| மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கையாளப்பட்ட வழக்குகள் | 4 | 0 |
| மாவட்ட நீதிமன்றத்தில் கையாளப்பட்ட வழக்குகள் | 35 | 0 |

## 11. ஆதனப் பிரிவின் நடவடிக்கைகள் பற்றிய சிறு விபரம்

அரச உரிமைச் சட்டத்தின் கீழ் சகல அசையாச் சொத்துக்களையும் மதிப்பீடு செய்வதற்கான பொறுப்பு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக தேவையான மேலதிக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்ததன் மூலம் அரச சொத்து மதிப்பீட்டு அலகு மூலமாக கூட்டிணைக்கப்பட்டு துரித கருத்திட்டம் ஒன்றாக இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2018 ஆம் ஆண்டு பின்வரும் நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 33 அரச ஆதனங்களுடன் தொடர்புடைய விலைமதிப்புகளுக்கு உரிய கோவைகள் 450 இன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 350 கோவைகளின் கீழ் மொத்த ஆதன அலகுகள் 3,350 க்கு ஏற்புடைய ஆதன விலைமதிப்புக்கள் திணைக்களத்தினால் வருடத்திற்குள் வெற்றிகரமாக மேற்கெள்ளப்பட்டது.

- 6 கூட்டுத்தாபனங்களுக்கு உரிய நிறுவன ஆதனங்கள் விலைமதிப்பு செய்யும் நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய 78 கோவைகள் தொடர்பிலும் 55 கோவைகளின் மொத்த ஆதன அலகுகள் 658 க்கு ஏற்புடைய ஆதன விலைமதிப்பு நடவடிக்கைகள் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டு முறையாக மேற்கொள்ளப்பட்டது.

## 12. விலைமதிப்புத் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசேட கருத்திட்டங்களின் சாராம்சம்

கடந்த சில வருடங்களில் இலங்கையின் அரச இயந்திரத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அரசாங்க கொள்கைகள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்களுக்கு இணங்க நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள்

ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த அபிவிருத்திப் பணிகளை தடையின்றி முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு தொழிற்துறை உயர் விலைமதிப்பு மற்றும் ஆதன முகாமைத்துவ சேவைகளை பாரிய அளவில் வழங்கும் பொருட்டு விலைமதிப்புத் திணைக்களம் தொடர்புபட்ட பிரதான அபிவிருத்தித் திட்டங்களில் நாடு முழுவதும் பல்வேறுபட்ட துறைகளில் தோற்றம் பெற்ற வியாபார மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி பிரதேசங்கள், தேசியப் பொருளாதாரம், தேசிய போக்குவரத்து கட்டமைப்பு மற்றும் சுற்றுலா வலயங்களில் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளடங்கும். விலை மதிப்புத் திணைக்களம் இந்த விசேட கருத்திட்டங்களுக்குரிய சகல காணித் துண்டுகளினதும் காணி சுவீகரிப்பு மற்றும் காணி மீளமைப்பு குழுக்களின் கூட்டங்களில் பங்கெடுத்துள்ளது. அந்த சொத்துக்களின் விலை மதிப்புக்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காணி சுவீகரிப்பு மற்றும் காணி மீளமைப்பு குழுக்களின் கூட்டங்களில் எழுந்த பிணக்குகள் தொடர்புற்ற விசேட கூட்டங்களுக்கும் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

**2018 ஆம் ஆண்டு பொறுப்பளிக்கப்பட்ட விசேட கருத்திட்டங்கள்**

| இல | பொறுப்பான பிராந்திய அலுவலகம் | கருத்திட்டங்கள் |
|---|---|---|
| 1 | கொழும்பு மாநகரம் | புதிய களனிப் பாலம் நிர்மாணக் கருத்திட்டம் |
| | | ஒருகொடவத்த – அம்பதலே வீதி |
| | | கொழும்பு – ஹொரனை வீதி |
| | | கிருளபன – கொடகம வீதி |
| | | வேரஸ் கங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் |
| | | புனித செபஸ்தியன் வடக்கு கால்வாய் கருத்திட்டம் |
| | | கொம்பனித்தெரு மீள் அபிவிருத்தி கருத்திட்டம் |
| | | மட்டக்குளி பாலம் அபிவிருத்தி கருத்திட்டம் |
| | | ராஜகிரிய மேம்பாலம் கருத்திட்டம் |
| | | மெரின் ரைவ் வீதி கருத்திட்டம் |
| | | ஒருகொடவத்த அம்பதலே வீதி கருத்திட்டம் |
| | | ஸ்ரீ ஜயவர்தனபுர கொள்ளுபிட்டிய வீதி |
| | | நாராஹேன்பிட்ட நுகேகொட பாலம் |
| | | தெஹிவலை அத்திடிய வீதி |
| | | வட்டரப்பல வீதி |
| | | புதிய களணிப் பாலம் தொடக்கம் ராஜகிரிய வரை மேம்பால வீதி |
| 2 | மேல் மத்திய | வேரஸ் கங்க கருத்திட்டம் |
| | | கொட்டாவ – தலகல வீதி |
| | | கிருளபன – கொடகம வீதி |
| | | கோட்டை – போப்பே வீதி |
| | | வல்கம – தியகம வீதி (OPEC 2 கருத்திட்டம் ) |
| | | 6/1 பாலம் (கொட்டாவ) |
| | | கொட்டாவ – பின்ஹேன வீதி |
| | | கொட்டாவ – பன்னிபிட்டிய வீதி |
| | | தலகல – மொரகஹஹேன வீதி |
| | | சொய்சா வீதி |
| | | ரொபட் குனவர்தன மாவத்தை |
| | | கடுவளை – அத்துருகிரிய வீதி |
| | | வல்கம – அத்துருகிரிய வீதி (OPEC 3 கருத்திட்டம்) |
| | | பாராளுமன்ற ஆற்றங்கரை |
| | | பெலவத்த அகுரகொட வீதி |
| | | பிலியந்தல - மஹரகம வீதி (OPEC 2 கருத்திட்டம் ) |
| | | மாகும்புர - மாஹேனவத்த உத்தேச புதிய கருத்திட்டம் |
| | | களணிமுல்ல கொஸ்வத்த வீதி கருத்திட்டம் |
| 3 | மேல் வடக்கு | மத்திய அதிவேகப் பாதை கருத்திட்டம் |
| | | களணி - முதுன்கொட வீதிய விரிவாக்க கருத்திட்டம் |
| 4 | மேல் தெற்கு | ஹொரன – அகுருவாதொட்ட – அளுத்கம வீதி |
| | | பொகுனவிட்ட – கொரலஇம வீதி |
| | | களுவெல்ல – பெல்லபிட்டிய வீதி |
| | | வாத்துவ - மொரன்துடுவ வீதி |
| | | கொட்டாவ தலகல வீதி |
| | | பெல்லன - மொரகல வீதி |
| | | ருவன்புர அதிவேகப் பாதை |
| 5 | தெற்கு | மாத்தறை - ஹக்மன வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் |
| | | மொரகொட எல |
| | | தெற்கு அதிவேகப் பாதை |
| | | காலி பத்தேகம வீதி |
| | | ஹம்பாந்தோட்டை கன்னொருவ வீதி |
| | | மிரிஜ்ஜவில சூரியவெவ வீதி கருத்திட்டம் |

| | | |
|---|---|---|
| | | வலஸ்முல்ல நகர அபிவிருத்தித் திட்டம் |
| | | வீரகெட்டிய நகர அபிவிருத்தித் திட்டம் |
| | | திஹகொட - கம்புறுபிட்டிய - மாரவல - கொடபொல வீதி விரிவாக்கம் கருத்திட்டம் |
| 6 | மத்திய - I | மத்திய அதிவேகப் பாதை |
| | | A9 வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் |
| | | வில்லியம் கொபல்லாவ மாவத்தை |
| | | பேராதனை பதுளை செங்கல்லடி வீதி |
| | | கண்டி – கிரிமெட்டிய வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் |
| | | பேராதனை ஹல்ஒலுவ வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் |
| | | மொரகொல்ல – நீர் மின்வலு கருத்திட்டம் |
| | | மீபே எல இடது கரை மறுசீரப்பு கருத்திட்டம் |
| 7 | மத்திய - II | மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டம் |
| | | வடமேல் மாகாண ஆற்றுத் திட்டம் |
| | | கண்டி யாழ்ப்பாண வீதி |
| | | தலகஹபிட்டிய – தொம்பவல வீதி |
| | | ரத்தொட்ட இலுக்கும்புர வீதி |
| | | மத்திய அதிவேகப் பாதை |
| | | நகல்ஸ் பாதுகாப்பு கருத்திட்டம் |
| 8 | வட மத்திய | மெதிரிகிரிய கந்தளாய் வீதி |
| | | மெதிரிகிரிய சர்வதேச விளையாட்டு மைதானம் |
| | | மத்வத்து ஓயா கருத்திட்டம் |
| | | யான் ஓயா கருத்திட்டம் |
| | | மருதன்கடவல - மட்டக்களப்பு வீதி |
| | | பொலனறுவை புதிய நகரம் |
| | | பொலனறுவை சுற்று வட்டம் |
| | | கதுறுவெல புதிய சந்தைக் கட்டிடத் தொகுதி |
| 9 | வட மேல் | மத்திய அதிவேக நெடுஞ்சாலை (பகுதி II,III,IV) |
| | | தெதுருஓய நீர்மின் கருத்திட்டம் |
| | | அம்பேபுஸ்ஸ – குரநாகல் - திருகோணமலை வீதி கருத்திட்டம் |
| | | வயம்ப கங்க கருத்திட்டம் |
| | | தம்புல்லை புகையிரத வீதி |
| 10 | சப்பிரகமுவ | மத்திய அதிவேக நெடுஞ்சாலை |
| | | எஹலியகொட தெஹிஓவிட்ட வீதி |
| | | தெரனியகல தெஹிஓவிட்ட வீதி |
| | | இரத்தினபுரி முன்புற வீதி |
| | | மகாவலி அதிகாரசபை காணி |
| | | ருவன்புர அதிவேகப் நெடுஞ்சாலை |
| 11 | ஊவா | லுனுகம்வெஹர பெரலியெல கதிர்காமம் வீதி அபிவிருத்தி கருத்திட்டம் |
| | | பதுளை – செங்கலடி வீதி அபிவிருத்தித் திட்டம் |
| | | உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தித் திட்டம் |
| | | மொனராகலை நீர்மின்வலு கருத்திட்டம் |
| | | பதுளை - ஹாலிஎல - எல்ல நீர்மின்வலு கருத்திட்டம் |
| | | உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தித் திட்டம் |
| | | பதுளை ஸ்பிரிங்வெலி வீதி அபிவிருத்தி கருத்திட்டம் |
| 12 | வடக்கு | AB 31 வீதி |
| | | கரைநகர் - யாழ்ப்பாணம் வீதி |
| | | வவுனியா நீர் வழங்கல் திட்டம் |
| 13 | கிழக்கு | கின்னியா தம்பலகமுவ வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் |
| | | யான்ஓயா நீர்த்தேக்க கருத்திட்டம் |
| | | பேராதனை – செங்கலடி வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் |
| | | ரம்பகென் ஓயா நீர்மின்வலு கருத்திட்டம் |

## 13. கல்வி முன்னேற்றம்

***அறிவு, மனப்பாங்கு மற்றும் வினைத்திறன்"*** எனும் கருப்பொருளினை அடிப்படையாகக் கொண்டு வாழ்நாள் முழுவதும் கல்வி மேம்பாடு (Life Long Lerning) எனும் நிறுவனத்தின் ஊடாக ஊழியரின் பிரதான அடிப்படைகள், கௌரவம் மற்றும் அர்ப்பணிப்பு அத்துடன் ஊக்கம் என்பவற்றினூடாக திறன் அபிவிருத்தியுடன் இணைந்து செயலாற்றுகை மதிப்பீட்டை மேம்படுத்தி வருகின்றது. விலைமதிப்புத் திணைக்களத்தினுள் திறன் அபிவிருத்தி நிலையம் அமைக்கப்பட்டதன் நோக்கம் சகல ஆளணியினரதும் அறிவு வளர்ச்சியை மேம்படுத்தும் பரந்த நோக்கிலாகும். இந்த திறன் அபிவிருத்தி நிலையமானது, (SDC) விலைமதிப்புத் திணைக்களத்துடன் சேர்ந்து பயிற்சி பாடசாலையொன்றாக ஆரம்பத்தில் நிறுவப்பட்டது. பயிற்சி சார்ந்த துறைகளில் அதிக கிராக்கி நிலவியதன் காரணமாக அதன் செயற்பாடுகள் விரிவாக்கம் பெற்று இந்த பயிற்சிப் பாடசாலை புத்தாக்க நிறுவனமாக மாற்றம் பெற்றது. கடந்த வருடங்களில் இந்த பயிற்சி நிறுவனத்தினால் இலாபகரமான மற்றும் இலாப நோக்கம் அற்ற பல்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திணைக்கள மட்டத்திலும் வெளி நிறுவனங்களுக்கும் நடாத்தப்பட்டன.

திணைக்களத்தின் உயர் முகாமைத்துவ மட்டம் தொடக்கம் உதவிப்பதவியினர் மட்டம் வரையான திணைக்கள ஊழியர்களின் அறிவு, மனோபாவம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதன் ஊடாக உன்னத தன்மையினை அடைவதை நோக்காக கொண்டு செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவை ஒழுங்கமைத்து நடாத்தப்பட்டன.

திறன் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு பிரதான பகுதிகளுக்குள் அடங்குகின்றன.

- உள்வாரி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
    - பதவி தொடர்பான பயிற்சி நிகழ்சித் திட்டங்கள்
    - குறித்த விடயம் தொடர்பான நோக்காகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள்
    - பரீட்சையினை நோக்காகக் கொண்ட பயிற்சி வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள்
    - அறிவைப் பகிர்ந்து கொள்ளும் வகுப்புகள்
    - சாதகமான எண்ணக்கருக்கள் மற்றும் பயனுள் அமர்வுகள்


- வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
    - உள்ளூராட்டசி மன்ற ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள்
    - மாகாண வருமான உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் மற்றும் செயலமர்வுகள்
    - விஞ்ஞானமானி சொத்து முகாமைத்துவ மதிப்பீட்டு பட்டதாரிகளுக்கான நிகழ்ச்சித்திட்டம்
    - சுவீகரித்தல் அலுவர்களுக்கான செயலமர்வுகள் மற்றும் பயிற்சி வகுப்புகள்
    - தேவைக்கேற்ப விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

2018 ஆம் ஆண்டில் மொத்தமாக 24 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அவற்றுக்கு 478 பேர் கலந்துகொண்டனர். சகல பதவித் தரங்களையும் உள்ளடக்கிய வகையில் உள்ளக மற்றும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 23 நடாத்தப்பட்டுள்ளன. ஆரம்ப கள ஆய்வு தொடக்கம் விலைமதிப்பு அறிக்கைகளை தயாரித்தல் வரையிலான கோட்பாட்:டு மற்றும் செயல்முறைப் பயிற்சிகளை உள்ளடக்கி 10 நாட்களைக் கொண்ட ஏற்புடைய தேவைப்பாடுகளுக்காக வேண்டியே வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பட்டதாரிகள் 52 பேரின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டன.

## பகுதி III - நிதிசார் செயலாற்றுகையும் பகுப்பாய்வும்

### 14. நிதிசார் செயலாற்றுகையை அளவிடலும் அறிக்கையிடலும்

| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| **உண்மையான கட்டணம்** | ரூ.101,280,582 | ரூ.53,047,155 | ரூ.132,085,894.53 | ரூ.164,110,234.13 | **142,902,142** |
| **உத்தேச கட்டணம்** | ரூ.30,000,000 | ரூ.60,000,000 | ரூ.60,000,000 | ரூ.75,000,000 | **80,000,000** |



| செலவுத் தலைப்பு | விபரம் | ஒதுக்கீடு 2018 | மொத்தச் செலவு | சேமிப்பு 31.12.2018 | செலவு வீதம் | சேமிப்பு வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | **மீண்டுவரும் செலவுகள்** | 420,270,000.00 | | | | |
| | | | 376,413,220.34 | 15,906,779.66 | 96 | 4 |
| | **ஆளுக்குரிய வேதனாதிகள்** | **333,500,000.00** | **286,950,008.55** | **9,999,991.45** | 97 | **3** |
| 1001 | சம்பளமும் வேதனமும் | 200,000,000.00 | 205,947,204.10 | 902,795.90 | 100 | 0 |
| 1002 | மேலதிக நேர கொடுப்பனவுகள் | 3,500,000.00 | 5,973,366.45 | 26,633.55 | 100 | 0 |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 130,000,000.00 | 75,029,438.00 | 9,070,562.00 | 89 | 11 |
| | பிரயாணச் செலவுகள் | **18,000,000.00** | **17,630,352.10** | **369,647.90** | **98** | **2** |
| 1101 | உள்நாட்டு | 15,000,000.00 | 14,984,949.92 | 15,050.08 | 100 | 0 |
| 1102 | வெளிநாட்டு | 3,000,000.00 | 2,645,402.18 | 354,597.82 | 88 | 12 |
| | வழங்கல்கள் | **8,550,000.00** | **8,967,822.04** | **482,177.96** | 95 | **5** |
| 1201 | காகிதாதிகள்,அலுவலகதேவைகள் | 4,500,000.00 | 4,811,612.24 | 188,387.76 | 96 | 4 |
| 1202 | எரிபொருள்l | 3,500,000.00 | 3,619,000.80 | 280,999.20 | 93 | 7 |
| 1203 | உணவும் சீருடையும் | 550,000.00 | 537,209.00 | 12,791.00 | 98 | 2 |
| | **பராமரிப்புச் செலவுகள்** | **5,200,000.00** | **4,183,264.11** | **1,516,735.89** | **73** | **27** |
| 1301 | வாகனங்கள் | 4,000,000.00 | 3,121,672.60 | 878,327.40 | 78 | 22 |
| 1302 | இயந்திர உபகரணங்கள் | 700,000.00 | 952,331.51 | 247,668.49 | 79 | 21 |
| 1303 | கட்டிடங்கள் | 500,000.00 | 109,260.00 | 390,740.00 | 22 | 78 |
| | **சேவைகள்** | **46,020,000.00** | **49,301,974.30** | **3,518,025.70** | **93** | **7** |
| 1401 | போக்குவரத்து | 2,200,000.00 | 2,380,798.00 | 819,202.00 | 74 | 26 |
| 1402 | அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு | 4,500,000.00 | 4,737,225.99 | 12,774.01 | 100 | 0 |
| 1403 | நீரும் மின்சாரமும் | 8,500,000.00 | 8,411,434.48 | 88,565.52 | 99 | 1 |
| 1404 | வரிகள் உள்ளுராட்சி | 13,500,000.00 | 16,811,679.32 | 238,320.68 | 99 | 1 |
| 1408 | செயற்பாட்டு குத்தகையின் கீழ் வாகனக் குத்தகை | 10,320,000.00 | 8,758,860.00 | 1,561,140.00 | 85 | 15 |
| 1409 | ஏனைய | 7,000,000.00 | 8,201,976.51 | 798,023.49 | 91 | 9 |
| | **மாறால்கள்** | **9,000,000.00** | **9,379,799.24** | **20,200.76** | **100** | **0** |
| | ஆதனக் கடன் வட்டி | | | | | |
| 1506 | அரசாங்க ஊழியர் | 9,000,000.00 | 9,379,799.24 | 20,200.76 | 100 | 0 |
| | **மூலதனச் செலவுகள்** | 386,700,000.00 | 142,565,034.59 | 272,084,965.41 | 34 | 66 |
| | **மூலதனச் சொத்துக்கள்** மறுசீரமைப்பும் **மேம்பாடும்** | **12,000,000.00** | **8,537,730.97** | **3,462,269.03** | **71** | **29** |
| 2001 | கட்டிடங்கள் | 8,800,000.00 | 6,791,364.80 | 2,008,635.20 | 77 | 23 |
| 2002 | இயந்திரங்கள், உபகரணங்கள் | 1,500,000.00 | 767,151.06 | 732,848.94 | 51 | 49 |
| 2003 | வாகனங்கள் | 1,700,000.00 | 979,215.11 | 720,784.89 | 58 | 42 |
| | **மூலதனச் சொத்துக்கள் கைப்பற்றல்** | **4,200,000.00** | **8,240,522.05** | **23,409,477.95** | 26 | **74** |
| 2102 | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 2,200,000.00 | 2,617,153.68 | 32,846.32 | 99 | 1 |
| 2103 | இயந்திரங்கள்,உபகரணங்கள் | 2,000,000.00 | 5,623,368.37 | 23,376,631.63 | 19 | 81 |
| | **இயலளவு விருத்தி** | **11,500,000.00** | **11,158,781.57** | **841,218.43** | **93** | **7** |
| 2401 | ஆளணிப் பயிற்சி | 11,500,000.00 | 11,158,781.57 | 841,218.43 | 93 | 7 |
| | **அரசாங்க ஆதனங்கள் மதிப்பீடு** | **1,000,000.00** | **-** | **1,000,000.00** | - | **100** |
| 2509 | ஏனைய | 1,000,000.00 | - | 1,000,000.00 | - | 100 |
| | **அரசுடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான நட்டஈடு** | **358,000,000.00** | **114,628,000.00** | **243,372,000.00** | **32** | **68** |
| | **குறைந்த செயலாற்றுகை தொழில் முயற்சிகள், ஆதனங்கள்** | | | | | |
| 2501 | மீள்சீராக்கம் | 358,000,000.00 | 114,628,000.00 | 243,372,000.00 | 32 | 68 |
| | **மொத்தச் செலவுகள்** | 806,970,000.00 | 518,978,254.93 | 287,991,745.07 | 64 | **36** |

## பகுதி IV - பதவியணியும் மனித வளமும்

### 15 2018.12.31 திகதிக்கு பதவியணி

| பதவி (அனுமதிக்கப்பட்ட / தற்போதுள்ள) | அனுமதிக்கப் பட்ட பதவியணி புதிய | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| அரசாங்க பிரதம விலைமதிப்பீட்டாளர் | 01 | 01 | 00 |
| மேலதிக பிரதம விலைமதிப்பீட்டாளர ் | 04 | 01 | 03 |
| பிரதி விலைமதிப்பீட்டாளர் | 16 | 01 | 15 |
| பணிப்பாளர் நிருவாகம் | 01 | 00 | 01 |
| பிரதான கணக்காளர் | 01 | 01 | 00 |
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | 01 | 00 |
| கணக்காளர் | 01 | 00 | 01 |
| சிரேஷ்ட விலைமதிப்பீட்டாளர்/ பிராந்திய விலைமதிப்பீட்டாளர் | 80 | 15 | 65 |
| விலைமதிப்பீட்டாளர் / மாவட்ட விலைமதிப்பீட்டாளர் | 120 | 21 | 99 |
| சட்ட அலுவலர் | 02 | 01 | 01 |
| நிருவாக உத்தியோகத்தர் | 02 | 01 | 01 |
| தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 02 | 00 | 02 |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்கம் / தமிழ்) | 01 | 00 | 01 |
| உதவி விலைமதிப்பீட்டாளர் / உதவி மாவட்ட விலைமதிப்பீட்டாளர் | 360 | 315 | 45 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 25 | 27 | ூ2 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 03 | 00 | 03 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 103 | 95 | 08 |
| சாரதி | 18 | 19 | ு01 |
| அலுவலக உதவியாளர் சேவை | 74 | 67 | 07 |
| சுற்றுலா விடுதிக் காவலர் | 04 | 01 | 03 |

## முடிவுரை

அரசாங்க விலை மதிப்புத் திணைக்களமானது, எமது நாட்டின் தேச மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு முக்கிய பங்காற்றுகின்றது என்பதை பொதுமக்கள் நன்கறிவர். கட்டிடங்கள், வீடுகள் மற்றும் ஆதனச் சந்தை பற்றிய விரிவான மற்றும் பரந்த அனுபவம் உள்ள தொழில்முறை ரீதியான விலைமதிப்பீட்டாளர் அபிவிருத்தியின் பங்குதாரர் ஆவார். அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தின் பணி ஆதனங்களை விலைமதிப்புச் செய்வது மாத்திரமன்றி விலைமதிப்பிடல், ஆதன முகாமைத்துவம் மற்றும் ஆதன சுவீகரிப்பு தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண சபை போன்ற அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச சார்பு நிறுவனங்களுக்கு ஏற்புடைய சட்ட விதிகளுக்கு தேவையான அறிவுரைகளை வழங்குதல்.

2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையானது எமது நோக்கு, செயற்பணி, இலக்குகள் மற்றும் குறிக்கோல்கள் என்பவற்றை சிறந்த முறையில் அடையப்பெற்றதை பிரதிபலிக்கின்றது. இதற்குச் சான்றாக எமது மனித மற்றும் பௌதீக வளங்களின் பலம் மற்றும் குழுச் செயற்பாட்டுத் தந்திரோபாயமும் இணைந்து முன்னேற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும், நிதி அமைச்சருக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கும், கௌரவ பிரதி நிதி அமைச்சர் அவர்களுக்கும், திறைசேரியின் செயலாளர் அவர்களுக்கும், நிதி திட்டமிடல் அமைச்சின் அனைத்து ஊழியர்களுக்கும் இத்திணைக்களத்தின் விரிவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்ததற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது சேவைப் பெறுநர்களோடு ஒத்துழைப்புடன் இலக்கிடப்பட்ட பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அயராது அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கிய விலைமதிப்புத் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றி உரித்தாகட்டும். நமது நாட்டின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதோடு, தமக்குள்ள குறைந்த வளங்களைப் பயன்படுத்தி சேவை வழங்கி பூரண ஒத்துழைப்பை அரசுக்கு வழங்குவதற்கு திணைக்களம் கூடிய முயற்சி எடுக்கின்றது. அதிசிறந்த எதிர்கால செயற்பாடுகளை எதிர்பார்க்கும் விலைமதிப்புத் திணைக்களத்திற்கு அப்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்வதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பி.டி.டி.எஸ். முதுகுமாரண**
**அரசாங்க பிரதம விலைமதிப்பீட்டாளர்**